## 8.9 ஊராட்சி ஒன்றியங்கள் – இறந்த ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணையின் அடிப்படையில் வேலைவாய்ப்பளித்தல் – திருத்திய ஆணை

ஊரக வளர்ச்சித் துறை

அரசாணை (நிலை) எண் 888 நாள் : 8.6.1984

படிக்க :

1. அரசாணை (நிலை) எண் 1684, ஊ.வ. & உ.துறை, நாள் 18.7.74
2. அரசாணை (நிலை) எண் 2, நாள் 2.1.78
3. அரசு கடிதம் (நிலை) எண் 115, கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை நாள் 18.1.1983

**ஆணை**

பார்வை ஒன்று மற்றும் இரண்டில் கண்டுள்ள அரசாணைகளில், பணிக்காலத்தில் இறந்த அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணையின் அடிப்படையில், வேலைவாய்ப்பு அளிக்கும் சலுகை, மற்றவைகளுடன், ஊராட்சி ஒன்றிய ஊழியர்களுக்கும் விரிவாக்கப்பட்டது. தற்போதுள்ள விதிமுறைகளின்படி ஊராட்சி ஒன்றிய பணியாளர்கள் பணிக்காலத்தில் இறந்தால் அவர்களின் வாரிசுகளுக்கு, கருணையின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியப் பணியிடங்களில் தான் வேலைவாய்ப்பு அளிக்கமுடியும். இவ்வித முறை 1.6.81–க்கு முன், அதாவது ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவதற்கு முன், பணியில் இறந்த ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்கும் பொருந்தும். இவ்விதி முறைப்படி, இறந்த ஊராட்சி ஒன்றிய பணியாளர்களின் வாரிசுகள் எவ்வளவு கல்வித்திறன் பெற்றிருந்தாலும் அவர்களை ஊராட்சி ஒன்றிய பணியிடங்களில் தான் அமர்த்த இயலும். ஆகவே, வழங்கப்பட்ட வேலைவாய்ப்பு அவர்களின் கல்வித்திறனுக்கு ஒத்ததாக இல்லை.

2. 1.4.74 முதல் ஊராட்சி ஒன்றிய பணியாளர்களான காசாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், தலைமை எழுத்தர் போன்ற பணியிடங்கள் அரசுப் பணிகளாக ஆக்கப்பட்டமையால் குறைந்த அளவு கல்வித்தகுதியும், அதற்கு மேலும் கல்வித்தகுதி படைத்த காலஞ்சென்ற ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் வாரிசுதாரர்களை, அவரவரது கல்வித் தகுதிக்கு ஏற்றவாறு ஊராட்சி ஒன்றியப் பணியிடங்களில் அமர்த்த இயலவில்லை. இந்நிலை 1.6.81 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்ட இறந்த ஆசிரியர்களின் வாரிசுதாரர்களுக்கும் பொருந்தும்.

3. எனவே, மேற்கூறிய சூழ்நிலையிலும், மிகக்குறைந்த அளவே உள்ள ஊராட்சி ஒன்றிய பணியிடங்களை கணக்கில் கொண்டும், ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் (ஆசிரியர்கள் உள்பட) வாரிசுதாரர்களையும், அவரவரது கல்வித்தகுதி, வயது முதலியவற்றை கருத்திற்கொண்டு, பணிக்காலத்தில் இறந்த அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு அரசுப் பணியிடங்களில் வேலைவாய்ப்பளிப்பதுபோல, தமிழ்நாடு தேர்வாணைக்குழுவின் உள்ளிட்ட எல்லைக்குட்பட்ட பணியிடங்களில், தேர்வாணைக்குழுவின் ஒப்புதலுடன் பணி அமர்த்தலாம் என அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை வேலைவாய்ப்பு மற்றும் பணி மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறைகளின் முறையே அலுவல் சார்பற்ற குறிப்பு எண் 8112/பி1/84.1, நாள் 7.5.84, 40207/84.1, நாள் 22.5.84 மூலம் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**லஷ்மி பிரானேஷ்**
அரசு கூடுதல் செயலாளர்